(முற்பகல் 10-00)

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்த அகதிகள் புனர் வாழ்வு திட்டத்தின் அடிப்படையிலே பல்வேறு இடங்களில் குடி அமைப்பு செய்வதற்கு திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். ஆனால் இந்த திட்டங்களெல்லாம் முழுமை பெறவில்லை. உதாரணத்திற்கு வியாசர்பாடி போன்ற பகுதியில் இருக்கிறவர்கள் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கு 3 செண்ட் நிலமாவது கொடுப்பதற்கு அரசாங்கம் வேண்டிய ஏற்பாடு செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன். அதுவல்லாமல் அவர்களுக்குக் கட்டிடம் கட்டிக் கொடுப்பதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் குறைவாக இருக்கிறது. அதையும் சற்று உயர்த்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாவென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, சமீபத்தில்தான் அவர்கள் இங்கு வந்து ஒரு கூட்டமே கூட்டி, அதிகாரிகளை வைத்து ஆலோசனை நடத்தி அவர்களுக்கு இடங்கள் ஒதுக்குவது பற்றி முடிவு எடுப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் கொடுக்கிற நிதி கட்டிடத் திற்குப் போதவில்லை என்ற காரணத்தினால் மீண்டும் கேட்டிருக் கிறோம். அவர்கள் கொடுக்கவில்லையென்றால் தமிழக அரசே செய்வதற்கு முதலமைச்சரவர்களைக் கலந்து ஆவன செய்யலாம் என்று முடிவு செய்திருக்கிறோம்.

சீத்தாபுரம் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

*579 வினா—**திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சிறுப்பாக்கம் தொகுதியில் சீத்தாபுரம் அரிசன குடியிருப்பில் உள்ளவர்களுக்கு அந்த இடத்தை பட்டா செய்து தரும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: (அ) & (இ) சீதாபுரம் அரிசன காலனியில் உள்ள அரிசனங்களுக்கு வீட்டுமனை வசதி அளிப்பதற்காக திம்மாபுரம் கிராமத்தில் 6.75 ஏக்கர் புஞ்சை